**செய்தி வெளியீடு எண் : 702** **நாள்: 30.04.2022**

# திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.40.45 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 60 திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.206.54 கோடி மதிப்பீட்டிலான 285 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 54,230 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (30.4.2022) திண்டுக்கல்லில் நடைபெற்ற அரசு விழாவில், 40 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 60 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 206 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 285 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 54,230 பயனாளிகளுக்கு 364 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப் பணிகளின் விவரங்கள்

### நீர்வளத்துறை

நீர்வளத்துறை வாயிலாக தமிழ்நாடு முழுவதும் உள்ள நீர்நிலைகளைப் புனரமைத்து, தூர்வாரி, நீரின் கொள்ளளவை அதிகப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்வதோடு, புதிய நீர்நிலைகளை உருவாக்கிடவும், புதிய நீர் சேமிப்பு கட்டுமானங்களைக் குறிப்பாகத் தடுப்பணைகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, நீர்வளத்துறை சார்பில் ஆர்.கோம்பை கிராமத்தில் தொப்பையசாமி ஆற்றில் அணைக்கட்டு கட்டும் பணி, விராலிப்பட்டியில் கசிவுநீர் குட்டை புனரமைக்கும் பணி, நங்காஞ்சியாற்றின் குறுக்கே தங்கச்சியம்மாபட்டி மற்றும் ஐவ்வாதுபட்டி ஆகிய கிராமங்கள் மற்றும் பழனி - தேவஸ்தானம் கோயில் குடிநீருக்காக பாலசமுத்திரம் கிராமம் பாலாறு குடியிருப்புக்கு அருகே தடுப்பணை கட்டும் பணிகள் என 15 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 5 திட்டப் பணிகள்;

### பள்ளிக்கல்வித் துறை

அரசுப் பள்ளிகளில் வகுப்பறை, குடிநீர், கழிவறை, மின்சாதன வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், இணைய வசதிகளைப் பள்ளிகளில் ஏற்படுத்துதல், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட ‘‘இல்லம் தேடி கல்வி’’, "நம் பள்ளி நம் பெருமை" பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் கோபால்பட்டி, விருவீடு, அய்யலூர், வடமதுரை மற்றும் நத்தம் கோவில்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளிகள், வத்திப்பட்டி, கொழிஞ்சிப்பட்டி மற்றும் வளவிசெட்டிபட்டி அரசு உயர்நிலைப்பள்ளிகள் ஆகிய பள்ளிகளில் 4 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கலை மற்றும் கைவினை பொருட்கள் அறைகள், நூலக அறைகள், கணினி அறைகள், அறிவியல் ஆய்வகங்கள், உயிரியல் ஆய்வகங்கள், கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் கழிப்பறை கட்டடங்கள்;

**<u>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை</u>**

வருவாய்த்துறையானது மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் முக்கிய பங்காற்றுகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

அதன் அடிப்படையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் சாணார்பட்டி குறுவட்ட அலுவலருக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு, வத்தலகுண்டு கிராம நிர்வாக அலுவலருக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு, சின்னாளப்பட்டி வருவாய் ஆய்வாளருக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு, குஜிலியம்பாறை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் என 3 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

**<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை</u>**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊரகப் பகுதிகளிலும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் எவ்வித குறைபாடுமின்றி முழுமையாக கிடைத்திட அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் கனிமவள நிதித் திட்டம், மறுசீரமைக்கப்பட்ட விரிவான பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ், சிறுமலை ஊராட்சி, வெள்ளிமலை ஓடையில் தடுப்பணையுடன் கூடிய செயற்கை நீர்வீழ்ச்சி மற்றும் சிறிய பூங்கா, நூலகக் கட்டடம், அங்கன்வாடி மையக் கட்டடம், பொதுச்சாவடி, 2 கலையரங்கங்கள், பயணியர் நிழற்குடை, தானியக் கிடங்கு, ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம், பள்ளிக் கட்டடம், என 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் 16 முடிவுற்ற திட்டப் பணிகள்;

**பேரூராட்சிகள் துறை** சார்பில் மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ், 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட வடமதுரை மந்தைக்குளம்;

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை** சார்பில் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் திண்டுக்கல் அரசுப் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தில் கட்டப்பட்டுள்ள விடுதிக் கட்டடம்;

**கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை** சார்பில் அமரப்பூண்டி, குன்னுவராயன்கோட்டை, மேல்கரைப்பட்டி, தொப்பம்பட்டி, ஆயக்குடி, வெள்ளையக்கவுண்டனூர் ஆகிய இடங்களில் 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

**வேளாண் பொறியியல் துறை** சார்பில் கணக்கன்பட்டி, சத்திரப்பட்டி, விளாம்பட்டி, அய்யம்பாளையம் ஆகிய இடங்களில் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்கள்;

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை**யின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் எஸ்.பாறைப்பட்டி, காணப்பாடி, இராமநாதபுரம், எஸ்.குரும்பப்பட்டி, லெட்சுமணபுரம் மற்றும் வெள்ளத்தாதன்பட்டி ஆகிய இடங்கள் மற்றும் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் மூலம் மோளப்பாடியூர், ஸ்ரீராமபுரம் (மெயின்ரோடு), ஸ்ரீராமபுரம் (மதினா நகர்) மற்றும் எல்லமநாயக்கன்புதூர் ஆகிய இடங்களில் 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடங்கள்;

**தோட்டக்கலைத்துறை** சார்பில் ரெட்டியார்சத்திரத்தில் ஈராண்டு தோட்டக்கலை பட்டயக் கல்லூரியில் 89 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தேர்வு மையக் கட்டடம்;

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை** சார்பில் மட்டப்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம்;

**கூட்டுறவுத்துறை** சார்பில் பட்டிவீரன்பட்டியில் கட்டப்பட்டுள்ள புதிய மத்திய கூட்டுறவு வங்கி கிளைக் கட்டடம், திண்டுக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம் மற்றும் கன்னிவாடி கிளை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி பணப் பட்டுவாடா (ATM) கட்டடங்கள், என 55 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

**என மொத்தம் 40 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 60 திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**அடிக்கல் நாட்டப்பட்டுள்ள திட்டப் பணிகளின் விவரங்கள்**

**தமிழ்நாடு மின்சார வாரியத்தின்** சார்பில் 97 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கேதையறும்பு மற்றும் தும்பலபட்டி ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ள 110/22 கி.வோ துணை மின்நிலையங்கள், தும்பலபட்டியில் அமைக்கப்படவுள்ள 230/110 கி.வோ. துணை மின்நிலையம்;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை** சார்பில் 15-வது நிதிக்குழு மானியம் திட்டம் (வட்டார ஊராட்சி), பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பழங்குடியினர் நலம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சமத்துவபுரங்கள் புனரமைப்பு, தமிழ்நாடு கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நமக்கு நாமே திட்டம் (ஊரகம்), நபார்டு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், சமுதாயக்கூடம், சுகாதார வளாகங்கள், பள்ளிக் கட்டடங்கள், பயணியர் நிழற்குடை, சமத்துவபுரத்தில் பெரியார் சிலை மற்றும் வீடுகள் சீரமைத்தல், சாலை மேம்படுத்தும் பணிகள் என 53 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 170 திட்டப் பணிகள்;

**நீர்வளத்துறை** சார்பில் குளத்தூர், ஆர்,கோம்பை, ஜவ்வாதுபட்டி, சீலப்பாடி, முள்ளிப்பாடி, பெரியகோட்டை, சில்வார்பட்டி, கோடல்வாவி, சித்தலக்குண்டு, இராஜாக்கப்பட்டி, அகரம், அத்திக்கோம்பை, ஓடைப்பட்டி ஆகிய கிராமங்களில் அமைக்கப்படவுள்ள 13 தடுப்பணைகள், தாமரைக்குளம், புளியங்குளம், கருங்குளம், ரெங்கசமுத்திரம், வாடிகுளம், நரசிங்கபுரம் தாமரைக்குளம், பெரியகுளம், காட்டுப்பெரியகுளம், பூலான்குளம் ஆகிய குளங்களில் கண்மாய் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள், அகரம் கிராமத்தில் கோட்டூர் ஆவாரம்பட்டிகுளம் புனரமைக்கும் பணிகள், அழகாபுரியில் உள்ள குடகனாறு அணையில் பிரிவு அலுவலகம் கட்டும் பணி மற்றும் பொதுப்பணித்துறை வளாகத்தில் குடகனாறு உபகோட்டத்திற்கு கட்டடம் கட்டும் பணி, என 52 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 25 திட்டப் பணிகள்;

**பள்ளிக் கல்வித்துறை** சார்பில் திண்டுக்கல் மாவட்டத்தில் 29 அரசு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 22 அரசு உயர்நிலைப்பள்ளிகளில் குடிநீர் வசதிப் பணிகள் மற்றும் 8 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் கழிப்பறை கட்டடப் பணிகள், என 2 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 59 திட்டப் பணிகள்;

**சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை** சார்பில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் 6 அரசு உயர்நிலைப் பள்ளிகள், 10 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள், 10 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், 2 அரசு மேல்நிலைப் பள்ளிகள், என 28 பள்ளிகளில் 1 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய வைப்பறையுடன் கூடிய சத்துணவு சமையலறைக் கட்டடங்கள்;

**என மொத்தம் 206 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 285 திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பேரூராட்சிகள் துறை, கூட்டுறவுத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்), வனத்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, பட்டுவளர்ச்சித் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பால்வளத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, கைத்தறி மற்றும் கதர்த்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கலை மற்றும் பண்பாட்டுத் துறை ஆகிய துறைகளின் சார்பில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 54,230 பயனாளிகளுக்கு 364 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.இ. பெரியசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி, திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதி பிரகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ப. வேலுசாமி, செல்வி செ. ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இ.பெ. செந்தில்குமார், திரு.எஸ். காந்திராஜன், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் சா. விசாகன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in